**பதுளை மாநகர சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுகள்

## 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் 2018 மார்ச் 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 26 ஆந் திகதி மாநகர முதல்வருக்கு அனுப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதுளை மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிரயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரை வரி ரூபா 19,263,215 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் அந்த பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரண்டு நிலையான வைப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் ரூபா 667,788 தொகை ஆண்டிற்கான வருமானம் என மற்றும் நடைமுறை சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் ரூபா 264,500 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கு அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 26,328,386 இனால் குறைவாக கணித்திருந்தமையினால் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 39,825 தொகைக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது பிளாஸ்டிக் மீள்சுழற்ச்சி நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் மூலதனச் செலவுகள் ரூபா 1,618,488 தொகையினை மூலதனப்படுத்தி இருக்காமையினால் நிலையான சொத்துக்கள் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கு அந்த பெறுமதினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) கடந்த ஆண்டு கொள்வனவு செய்திருந்த ரூபா 699,333 தொகைக்கான பிளாஸ்டிக் அழுத்தும் இயந்திரத்தின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்காமையால் நிலையான சொத்துகள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை கணக்கு அந்த பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு தொடர்பாக வங்கியினால் பிழையான முறையில் தடுத்து வைத்திருந்த வரி ரூபா 112,449 தொகை சபையின் வருமானம் மற்றும் பெறவேண்டிய மீதிகள் என கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணியினர் சம்பளம் என செலுத்தியிருந்த ரூபா 35,604,346 தொகை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய மீதி ஒன்றாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கச் செய்யப்படாத கணக்குகள்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், அட்டவணைகள், பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பொழிப்பு திரட்டுகளுடன் இணக்கஞ் செய்தபோது ரூபா 123,395,704 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 48,931,168 தொகையான பெற வேண்டிய கணக்கில் 10 வருட காலங்கடந்துள்ள நிலுவை வீதிவரி ரூபா 22,590,623 தொகை, 07 வருட கால கடந்த ஏனைய நிலுவை வருமானம் ரூபா 24,114,292 தொகை மற்றும் 08 வருட காலங்கடந்த ரூபா 2,226,253 தொகையான மதிப்பளிக்கப்படாத 108 காசோலைகள் என்பனவற்றை அறவீடு செய்தவற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 153,206,806 தொகைக்கான செலுத்த வேண்டிய கணக்குகள் மீதியில் 05 வருட காலங் கடந்துள்ள ரூபா 109,762,352 இற்கான செலவு கடன் கொடுத்தோர் மற்றும் 06 வருட காலங் கடந்துள்ள ரூபா 43,444,455 இற்காக களஞ்சிய கடன் கொடுத்தோர்கள் என்பவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை**

(அ) தேவையான தகவல்கள் சமர்பிக்கப்பட்டமையால் கூட்டுத்தொகை ரூபா 803,111,471 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் செய்வதற்கு / சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நீண்ட காலமாக முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 81,794,682 தொகைக்கான பலவின நன்கொடை கணக்கின் மீதி தொடர்பான தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை.

## 1.3.5 இணக்கமின்மை

### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) மாநகர சபைச் கட்டளைச் சட்டம் | | |
| (i) பிரிவு 127(1) | - | 2013 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 30 திகதி வரையான காலப்பகுதியில் 946 கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்கள் அனுமதிக்கப் பட்டிருந்த போதிலும் 187 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 218 | - | 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான சபையின் நிருவாகம் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று சமர்பித்திருக்கவில்லை. |
| (iii) உப பிரிவு 229 (ஈ) | 2,738,864 | பிளாஸ்டிக் மீள் சுழற்ச்சி செயற்திட்டம் நிர்மாணிப்பதற்காக பாதீடு அல்லது குறைநிரப்பு ஏற்பாடுகளின் மூலம் அங்கீகாரம் இன்றி செலவிடப் பட்டுள்ளது. |
| (iv) உப பிரிவு 254அ (1) | 24,146,745 | சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஏனைய அனைத்துக் கட்டணங்கள், தண்ட வருமானங்கள் நகர ஆணையாளரினால் அறவிடப் பட்டிருக்கவில்லை. |
| (v) பிரிவு 129 மற்றும் 2017 மார்ச் 17 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1778/45 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி | | ஒவ்வொரு நிறுவனங்களாலும் உருவாக்கும் குப்பைகளின் பாரத்தின் அடிப்படையில் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் வர்த்தக நிலையங்களில் இருந்து குப்பை வரி அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (M) | (i) | 1971 இன் 8 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தினால் திருத்த ப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் 10 ஆம் பிரிவு | 362,392 | உரிய தினத்தில் ஊழியர் சேமலாப நிதித்திற்கான பங்களிப்புத் தொகை செலுத்தாமையால் சபை நிதியத்தில் இருந்து மிகை விதிப்பு செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) | 1987 இன் 03 இலக்க பொது ஒப்பந்த வேலை உடன்படிக்கை சட்டத்தின் உப பிரிவு 6(1) (அ) | 6,905,000 | பிலாஸ்டிக் மீள் சுழற்சி நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை தொடர்பாக ஒப்பந்த வேலை ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்திருக்கவில்லை. |
| | (iii) | 1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23(அ) | | ஊன் அறுக்கும் நிலையத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காதுடன், சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய 71 வர்த்தக நிலையங்களுக்காக வியாபார அனுமதிப் பத்திரம் மாத்திரம் பெற்றிருந்தது. |
| (,) | (i) | ஊன் அறுப்பு கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாத் தின் 4 ஆம் பிரிவு | | மாடு ஒன்றினை அறுக்கப்படுவதற்கு முன்னர் சட்டத்தின் “ ஈ” படிவத்தின் பிரகாரம் விண்ணப்பம் ஒன்றின் மூலம் முன் அனுமதி பெற்றிருக்கவில்லை |
| | (ii) | ஊன் அறுப்பு கட்டளைச் சட்டத்தின் III அத்தியாத்தின் 22 ஆம் பிரிவு | | ஊன் அறுக்கும் நிலையம் தொடர்பாக துணை விதிகள் ஆக்கியிருக்காததுடன், மாடுகள் அறுக்கும் இடம் ஊண் அறுப்பு நிலைய நிருவாகியின் மற்றும் பொது மக்கள் சுகாதார பரிசேதகர் ஒருவரின் மேற்பார்வைக்கு ஆளாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (<) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| | (i) | பிரிவுகள் 4.5 மற்றும் 4.6 | 252,875 | சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள 12 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) | தாபனக் கோவையின் xxi அத்தியாயம் மற்றும் 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய இலக்கம் 5/2013, 2016 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 3/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 337,177 | சீருடைகள் மற்றும் தையல் கூலி எடுப்பதற்கு உரித்தில்லாத நிர்மாண வேலை அத்தியட்சர்கள் / தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆகிய உத்தியோத்தர்களுக்கு சீருடை படி வழங்கப்பட்டிருந்தது. |
| (c) | | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 104(4) | 996,500 | 2014 ஜூன் 17 திகதி விபத்துக்குள்ளாகிய நோயாளர் காவு வண்டி ஒன்றின் விபத்து தொடர்பான நட்டம் தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்று 2017 திசெம்பர் 31 திகதி வரை சமர்பித்திருக்கவில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 454 | | எல்லா அலுவலகங்களிலும் பொருட் பதிவேடு ஒன்று பேணப்பட்டி யிருக்கவில்லை. |
| | (iii) | நிதிப்பிரமாணம் 700(5) | 72,324,287 | மீளாய்வாண்டின் போது 79 நிர்மாண வேலைகள் தொடர்பாக உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |
| | (iv) | நிதிப் பிரமாணம் 751 | - | கொள்வனவு செய்யும் மற்றும் வழங்கப்படும் பண்டங்ள் தொடர்பாக விபரங்கள் இருப்புப் பதிவேட்டில் வகைப்படுத்தி பதிவு செய்யப்பட்டி ருக்கவில்லை. |
| | (v) | நிதிப் பிரமாணம் 757 (2) | 31,650 | நகர ஆணையாளரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தின் பண்டப் பற்றாக் குறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவையின் (i) வழிகாட்டல்கள் 5.4.4 | 1,381,000 | 2017 ஆண்டின் போது பிளாஸ்டிக் பழுதடைந்த பண்டங்கள் மறுசீரமைப்பு நிலையை கட்டிடம் நிர்மானிப்பதற்காக வழங்கிய முற்பணத்திற்காக சமர்பித்திருந்த பாதுகாப்பு பிணை முறி காலம் முடிவடைந்திருந்ததுடன், நிர்மாண வேலைக் காலப் பகுதியில் செல்லுபடியாகும் பாதுகாப்பு பிணை ஒன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (எ) | 2012 அக்டோபர் 05 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1778/45 வர்த்தமானி | | சபையினால் ஆக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுப் பொருள் தொடர்பாக துணை விதியில் 13 பிரதான விடயங்கள் குறிப்பட்டிருந்த போதிலும், அவற்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுததிருக்வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சுமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,789,058 தொகை ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 30,102,552 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம் சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | 2016 |
|---|---|---|
| | --------- | --------- |

| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 20,510,000 | 18,629,247 | 10,218,117 | 8,411,129 | 17,538,000 | 19,314,691 | 10,260,870 | 9,053,821 |
| (ii) வாடகை | 24,833,420 | 24,920,095 | 21,900,756 | 3,019,339 | 38,960,114 | 27,359,821 | 24,094,085 | 3,265,735 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 18,260,000 | 14,315,850 | 11,391,975 | 2,923,875 | 10,360,000 | 11,460,885 | 10,749,385 | 711,500 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 51,115,000 | 47,060,996 | 37,268,594 | 9,792,402 | 42,825,000 | 46,076,184 | 37,537,547 | 8,538,637 |
| மொத்தம் | 114,718,420 | 104,926,158 | 80,779,442 | 24,146,745 | 109,683,114 | 104,211,581 | 82,641,887 | 21,569,693 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல்கள் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 104.9 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 80.7 மில்லியன் தொகை ஆகும். எவ்வாறாயினும் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 24.1 மில்லியன் இற்கான வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 11.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீத வரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 261 ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் வரி செலுத்துவோரின் அசையும் ஆதனங்கள் இடைநிறுத்துவதன் மூலம் வீதி வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், 2017 அக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு 15 வீதவரி பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 20 காலாண்டுகளை விட மிகையான காலம் முதல் நிலுவையாக காணப்படும் ரூபா 13,922,535 தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை.

(ஆ) மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 254(1) மற்றும் 1946 இன் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார எல்லையில் காணப்படும் சினிமா கொட்டகைகளில் இருந்து களியாட்ட வரி அறவிடப்பட வேண்டுமெனினும், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,614,454 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) மாநகர சபை கட்டளைச் சட்டதின் 230(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து கட்டிடங்களிலும் வருடாந்தப் பெறுமதி மீது வீதவரி தயாரித்தல் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் 2011 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை பதுளை

நகரத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்டிருந்த 277 கட்டிடங்கள் தொடர்பாக வீதவரி மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாடகைக்கு கொடுக்கும் 100 கடைகளை 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பெறுமதி மதிப்பீடு செய்திருந்ததுடன், புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கைகள் மேற்கொண்டு வாடகை அறவீடு செய்திருக்கவில்லை. 1987 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படுவதினால் 2017 ஆண்டின் போது மாத்திரம் ரூபா 498,780 இற்காக வருமானத்தை சபை இழந்துள்ளது.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அனைத்து நிர்மாண வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன என கண்டறியப்பட்ட பதுளை சுரங்கப் பாதையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 5 கடைகளை 2017 ஆண்டின் போது வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 360,000 இற்கான கடை வாடகை வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(இ) பதுளை சேனாநாயக்க திடலில் நடாத்தப்பட்டு வரும் சபைக்குச் சொந்தமான பால் விற்பனை நிலையத்திற்காக 2016 திசெம்பர் 20 ஆந் திகதி ஊவா மாகாண தலைமை பெறுமதி மதிப்பீட்டாளர் மாதாந்தம் ரூபா 36,000 வாடகையொன்று பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 திகதிவரை புதிய பெறுமதி மதிப்பீட்டின்படி வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 17 மாதாந்த தவணைகளின் பெறுமதியாக ரூபா 620,142 இற்கான நிலுவை வாடகை ஒன்று சபைக்கு அறவீடு செய்தற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட சுவீனீதகம 04 கடைகள், 2017 திசெம்பர் 31 திகதி வரை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மூடப்பட்டிருந்ததுடன், 03 கடைகளுக்காக ரூபா 106,295 இற்காக நிலுவை வாடகை, வாடகையாளரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247 (அ)(ஆ)(இ) இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சபையினால் 2017 மார்ச் 31 திகதிக்கு முன்னர் வியாபார அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 563 வர்த்தக நிலையங்களினால் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் 2017 ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருக்காததுடன், இப்பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.6 நீதி மண்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நிதி மன்றத் தண்டப்பணம் ரூபா 13,237,018 தொகை ஆகும்.

**2.2.7 மிகை விதிப்பு**

மாகாண சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்ல வேண்டிய ஆட்களுக்கு எதிராக என்னால் 1994, 2004 மற்றும் 2007 ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட

மிகைவதிப்புக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,835,000 ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதார, பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பெருந் தெருக்கல் தொடர்பான விடயங்கள் முறைப்படுத்தல், நிர்வாகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு வசதிகள், நலனோம்பு ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை சபையினால் நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம் முச்சக்கர வண்டிகள், லொறி மற்றும் வேன் வண்டிகள் நிறுத்தப்படும் 72 தரிப்பிடங்கள் மூலம் 724 வாகனங்களில் இருந்து வருமானம் உழைத்திருந்த போதிலும் துணைவிதிகள் ஆக்கியிருக்கவில்லை.

#### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

மீளாய்வாண்டின் போது மாநகர சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகள் சேகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் இடங்களில் சேகரமாகும் நீர் மற்றும் குப்பைகள் மழை காலங்களில்

(ii) 2017 ஆகஸ்ட் 18 திகதி அளவில் 02 வருட காலத்தில் சேகரமாகிய சுமார் 26,000 மெற்றிக் தொன் உக்காத தடித்த பொலித்த பண்டம் குப்பைகளுக்காக மீள் சுழற்சி செய்யும் வேலைத் திட்ட மொன்று ஆரமபிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது பிலாஸ்டிக் மீள் சுழற்ச்சி நிலையம் நிர்மானிப்பதற்காக ரூபா 7,618,488 தொகை செலவிடப்படுத்துடன், 2017 திசெம்பர் 09 திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் 2018 செப்தெம்பர் அளவிலும் நிறைவேற்றியிருக்க வில்லை.

(iv) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவதற்காக முறையான நீண்ட காலத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஈ) சுற்றாடல் சார் சிக்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஊன் அறுப்பு நிலையம் நடத்துகின்ற பகுதி மற்றும் அதனது சுற்றுச் சூழலில் பதுலு ஓயாவின் கரையோரத்தில் அங்கீகாரமற்ற நிரந்தர நிர்மாண வேலைகள் பல காணப்பட்டன.

(ii) மாநகர சபை கட்டளை சட்டத்தின் 35 மற்றும் 56 பிரிவின் பிரகாரம் காணிகள் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன், சபைக்கு சொந்தமான கயிலகொட உடவெல்ல காணி வெளி தரப்பினரினால் அங்கீகாரம் இன்றி மணல் கரைக்குப் போடல் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

(அ) 2014 ஜுன் 17 திகதி நோயாயர் காவு வண்டி ஒன்று விபத்துக்கு உள்ளாகியதால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 363,420 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டின் போது 15 நினைவுச் சின்னங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 105,000 தொகை தனியார் கமபனி ஒன்றிற்கு செலுத்தியிருந்ததுடன், அந்த பணத்தில் ரூபா 55,000 தொகை இதுவரை தீர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 ஜுன் 26 திகதிய 18/2015 ஆம் இலக்கம் மற்றும் 2015 ஜுலை 13 ஆம் திகதிய 18/2015(1) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சுறுசுறுப்பான சேவை காலத்துடனான ஊழியர்களுக்கு விஷேட படிகள் செலுத்தப்பட வேண்டுமெனினும், பொருத்தமற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது 19 மாதங்களுக்காக ரூபா 3000 வீதம் ரூபா 57,000 விஷேட படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆண்டின் போது மாநகர சபை கட்டிடத்தின் மறுசீரமைப்பு அலுவல்களுக்காக 03 விலைமனுக்கள் சமர்ப்பித்திருந்ததுடன், விலைமனுக்கான நியாயமான, சமமான மதிப்பாய்வு ஒன்றிற்கு ஆளாக்காமல் ஒப்பந்த வேலைகாரர் ஒருவருக்கு விலைமனு வழங்கப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 197,831 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான 15 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களுக்காக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீடுகளை தரப்படுத்துதல் மற்றும் ஒதுக்குவதற்காக குழுவொன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நீண்டகாலமாக ஒரே உத்தியோகத்தர் தொகுதிக்கு ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. காத்திருக்கும் பதிவேட்டில் பெயர் பதியப்படாத உத்தியோகத்தர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) பதுளை வாராந்த சந்தை பூமியை மற்றும் ஊன் அறுப்பு நிலைய மின்சாரம் மற்றும் நீர் புகள் துண்டித்திருந்ததால் அதனை திரும்பி பெற்றுக் கொள்வதற்காக ரூபா 57,233 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்ததுடன், வாடகையாளரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 முறைச்சாரக் கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் காணப்படாத ரூபா 8,519,358 தொகை மற்றும் குப்பை குவிக்கப்படும் இடத்தை முன்னேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 இற்கான ஏற்பாடுகளை பயன்படுத்தி நகர முதல்வரினால் உத்தியோக பூர்வ அறையை மற்றும் நகர மண்டபத்தை திருத்துதல் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

**3.4 ஊழியர்கள் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 30 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், 122 ஊழியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**3.5 செயற்பாட்டு திறமையின்மை**

1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு, உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 481 கடைகளுக்காக 1987 ஆண்டின்போது மேற் கொள்ளப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருந்தது. 30 வருட காலப் பகுதியில் சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்திருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.6.1 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான 06 வருடங்களை விட பழமைவாய்ந்த பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 765,000 தொகைக்கான 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 09 உழவு இயந்திரங்கள் திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்த அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2016 ஜூன் 17 ஆந் திகதிய 06/2016 இலக்க நிதி அமைச்சு செயலாளரின் பிரகாரம் கேள்வி அழைக்கப்படும் போது திருப்பி செலுத்தப்படாத விலைமனுத் தொகை ரூபா 12,500 எனினும், பதுளை சேனநாயக்க திடலில் தரையின் கீழ் வாகன தரிப்பிடம் நிர்மாணிப்பதற்காக ஐந்து நிறுவனங்களில் இருந்து ரூபா 2500 வீதம் அறவிடப்பட்டிருந்தமையினால் திருப்பிச் செலுத்தப்படாத விலைமனுத் தொகை ரூபா 50,000 இனால் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

**3.8 பெறுகை**

**3.8.1 பெறுகைத் திட்டம்**

சபையினால் மீளாய்வாண்டின் போது பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.8.2 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதுளை சேனாநாயக திடலில் வாகனத் தரிப்பிடம் ரூபா 75,147,363 இற்கான மதிப்பீடு ஒன்றின் மீது நிர்மாணிக்கும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1 பந்தியின்

பிரகாரம் பெறுகை குழு ஒன்று நியமனம் செய்திருக்காததுடன், பெறுகை நிறுவனத்தினால் ஆரமப் சுற்றாடல் பரிசோதனை, சுற்றாடல் சார் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு, சமூகத்தாக்கங்கள் மீதான மதிப்பீடு மற்றும் செயற்திட்டத்திற்காக முன் ஆயத்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சேனாநாயக திடலில் தரையின் கீழ் வாகன தரிப்பிடத்திற்காக பதுளை மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் படி ஆரம்ப செலவுகள் மற்றும் நிலத்தை தயாரித்தல் தோண்டுதல் அலுவல்களுக்காக ரூபா 1,392,229 தொகை உட்படுத்தியிருந்த போதிலும் ரூபா 3,819,184 இற்கான கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் உழைப்பை பங்களிப்பு மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தி 2014 ஏப்ரல் 02 திகதி அளவில் தயாரிக்கும் அலுவல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. பின்னர் அவ்விடத்திற்காக உள்ளுராட்சி திணைக்களத்தினால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 326,700 தொகை செலுத்தியிருந்ததுடன், இதற்காக மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8:14:1 இன் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த திகதியின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட கால நீடிப்பு ஒன்று இன்றி நிர்மாண வேலை மேற்கொள்ளும் நிறுவனத்திடம் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும் பதுளை பிலாஸ்டின் நிலையத்தின் நிர்மாண வேலை அங்கீகரிக்கப்பட்ட நாட்களை மிகைத்து நடைபெற்றிருந்தமையினால் ஏற்பட்டிருந்த தாமததிற்காக தாமதக் கட்டணம் ரூபா 158,815 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஈ) பதுளை மாநகர சபையின் அலுவலக கட்டடிடத்தை புனர்நிர்மாணம் செய்தல்**

நகர சபையின் அலுவலகக் கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்யும் ஒப்பந்த வேலையின் தொழிநுட்ப மதிப்பாய்வு குழு தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 23,807,701 இற்கான குறைந்த விலை சமர்பித்திருந்த ஒப்பந்தக்காரருக்கு நிர்மாண வேலை ஒப்படைக்கப்பட வேண்டுமெனினும் ரூபா 24,005,531 இற்கான விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்த போது கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2017 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு செயற்படுதல்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குப் புத்தகம் மற்றும் பதிவேடுகள் நாளதுவரை பேணப்படாமை. |
| | | (ii) | வருமான பதிவேடு பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படாமை. |
| (இ) | இருப்பு | (i) | கலஞ்சிய இருப்புக் கட்டுப்பாடு முறையாக கடைபிடிக்கப்படாமை |
| | | (ii) | இருப்பு அட்டைகள் பேணப்படாமை. |
| (ஈ) | கடன்பட்டோர் கடன் கொடுத்தோர் | (i) | அட்டவணைகள் தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | பதிவேடுகள் பேணப்படாமை. |
| | | (iii) | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (உ) | ஊழியர் முகாமைத் துவம் | (i) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை. |
| | | (ii) | மிகை ஊழியர்களை முறைப்படுத்தாமை. |
| (ஊ) | செயற்திட்டங்கள்/ ஒப்பந்த வேலைகள் | (i) | உடன்படிக்கைளின் பிரகாரம் செயற்பாடமை. |
| | | (ii) | நிர்மாண வேலைகளுக்காக போதியளவு மேற்பார்வை காணப்படாமை. |
| (எ) | திண்மக் கழிவுப் பொருள் முகாமை த்துவம் | (i) | திண்ம கழிவுப் பொருட்கள் உக்கக்கூடியயை ஓரளவு உக்கக் கூடியவை உக்காதவை என வகைப்படுத்தி சேகரிக்காமை. |
| | | (ii) | மல கழிவுப் பொருள் அகற்றுவதற்காக பிரதான அலகு ஒன்று இன்மை. |
| | | (iii) | ஊண் அறுப்பு நிலையத்தில் கழிவுகளை ஆறுகளுக்கு விடுவித்தல். |
| (ஏ) | பெறுகை | | பெறுகை பிரமாணங்களை கடைபிடிக்காமை |